செய்தி வெளியீடு எண். 224 நாள்: 28.04.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்கள் நிலுவையில் உள்ள சந்தா தொகையை குறிப்பிட்ட காலக்கெடுக்குள் செலுத்த வேண்டும் இல்லை எனில் கேபிள் தொடர்பான பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்டத்தில் அரசு கேபிள் டி.வி நிறுவனம், பொதுமக்களுக்கு உயரிய தரத்தில் குறைவான கட்டணத்தில் கேபிள் டி.வி சேவை வழங்கும் நோக்கத்தில் உள்ளூர் கேபிள் டி.வி ஆப்பரேட்டர்களை அங்கீகரித்து ஒளிபரப்பிற்கான சகல வசதிகளையும் ஏற்படுத்தி தந்துள்ளது. இந்நிறுவனத்தின் சந்தாதாரர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் சந்தா தொகையினை வசூலித்து அரசு கணக்கில் செலுத்த வேண்டியது உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டரின் கடமையாகும். இந்நிலையில் திருவள்ளூர் மாவட்டத்தில் சென்னை மாநகர பகுதிகளை தவிர்த்து 815 உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் உள்ளனர். இதில் ஒருசிலரை தவிர இதர கேபிள் ஆப்பரேட்டர்கள் மாதாந்திர சந்தா தொகையினை செலுத்தாமல் அதிக அளவில் நிலுவை வைத்துள்ளனர். அதன்படி திருவள்ளூர் மாவட்டத்தில் கேபிள் டி.வி ஆப்பரேட்டர்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி நிறுவனத்திற்கு ரூ.2,12,17,161/- நிலுவை தொகையாக செலுத்த வேண்டியுள்ளது. நிலுவை தொகை மற்றும் மாதாந்திர சந்தா தொகையினை செலுத்துமாறு ஏற்கனவெ அறிவுறுத்தியும் கேபிள் ஆப்பரேட்டர்கள் தொகையை செலுத்தாமல் உள்ளனர்.

எனவே உள்ளூர் கேபிள் டி.வி ஆப்பரேட்டர்கள் நிலுவையில் உள்ள சந்தா தொகையில் 50 சதவீதத்தை 30.04.2017-க்குள்ளும் மீதமுள்ள தொகையை 15.05.2017-க்குள்ளும் செலுத்த வேண்டும்.

இந்த காலகெடுக்குள் அரசு கேபிள் டி.வி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகை மற்றும் மாதாந்திர சந்தா தொகை செலுத்தாதவர்களின் கேபிள் தொடர்பான பொருட்கள் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இந்நிறுவனத்திற்கு மத்திய அரசின் தொலை தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தால் MIB Digital ஒளிபரப்பு உரிமம் வழங்கப்பட்டு தற்போது தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி நிறுவனம், டிஜிட்டல் செட் - டாப் பாக்ஸ் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அப்படி வழங்கும்போது சந்தா நிலுவை தொகையினை முழுமையாக செலுத்தியவர்களுக்கு மட்டுமே டிஜிட்டல் செட் - டாப் பாகஸ் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~